# புற்றுநோய்களுக்கு சரியான சிகிச்சையளித்து குணப்படுத்துவதில் கே.எம்.சி.எச்., சர்வதேச தரம்

## டாக்டர்.பரத் ரங்கராஜன் விளக்கம்

**கோவை, மார்ச் 27:**புகையிலை பழக்கம், மாறிவரும் உணவு முறைகள், உடற்பயிற்சியின்மை, சுற்றுச்சூழல் மாசு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உடலில் புற்றுநோய் ஏற்படுகிறது. இதில் பெண்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் அதிகமாக ஏற்படுகிறது. ஆண்களுக்கு நுரையீரல் புற்றுநோய், தலை, கழுத்து, வாய், தொண்டை, உணவுக்குழாய், மலப்பை மற்றும் பிராஸ்டேட் புற்றுநோய் ஏற்படுகிறது.

பொதுவாக எந்த வகை புற்றுநோயானாலும் அதற்குரிய தனித்தனி சிகிச்சை முறைகள் உள்ளன. அவை அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் கீமோதெரபி சிகிச்சையாகும்.

ஆரம்ப நிலையில் உள்ள புற்றுநோய் கட்டிகளுக்கு அறுவை சிகிச்சை அல்லது கதிர்வீச்சு சிகிக்சை தேவைப்படலாம். பல விதமான புற்றுநோய்களுக்கு கீமோ தெரபி எனப்படும் ஊசி வழி அல்லது வாய் வழி மருந்து மற்றும் ஹார்மோன் சிகிச்சை தேவைப்படலாம். சிலவற்றிற்கு இந்த மூன்று வகை சிகிச்சைகளோ அல்லது இரண்டு வகை சிகிச்சைகளோ தேவைப்படுகிறது.

பெரிய அளவிலான புற்றுநோய் கட்டிகளை அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு, கீமோதெரபி சிகிச்சை கொடுத்து கட்டியின் அளவை சுருக்கிய பின்னர் அறுவை சிகிச்சை செய்து அகற்றுவதன் மூலம் எளிதில் குணமாகும் வாய்ப்பு அதிகம். இந்த வகையான புற்றுநோயை குணப்படுத்த டார்க்கெட்டட் தெரபி *(Targeted Therapy)* என்கிற நவீன சிகிச்சை முறையும் பயன்படுத்தப்படுகிறது. லிம்போமா *(lymphoma)* என்கிற புற்றுநோய் அணுக்களில் சிடி 20 என்கிற மார்க்கர் காணப்படலாம். அவ்வகையான லிம்போமா *(lymphoma)* சிகிச்சைக்கு சிடி 20 எதிர் மருந்துகள் *(Rituximab)* பயன்படுத்தலாம்.



டாக்டர்.பரத் ரங்கராஜன்

இதே போல் மார்பக புற்றுநோய் அணுக்களில் ஹெர்2 நியூ *(HER2 NEU)* என்கிற மார்க்கர் இருந்தால், ஹெர்2 எதிர் மருந்துகளை பயன்படுத்தலாம். இவ்வாறு ஒவ்வொரு புற்றுநோய்க்கும் பிரத்யேகமாக இருக்கும் தன்மையை அறிந்து அதற்கு ஏற்றாற்போல் சிகிச்சை செய்வதே டார்க்கெட்டட் தெரபி எனப்படும்.

ஒவ்வொரு புற்றுநோயும் வித்தியாசமானது. இதனால் எந்தவொரு புற்றுநோய்க்கும் எந்த வகையான சிகிச்சை கொடுக்க வேண்டும் என்பதை கே.எம்.சி.எச்.மருத்துவமனையிலுள்ள சிறந்த மருத்துவ நிபுணர்கள் குழு *(Multi disciplinary Tumor Board)* கண்டறிந்து அதற்குரிய சிகிச்சை முறைகளை பரிந்துரைப்பார்கள்.

அதன்படி சிகிச்சை அளிப்பதன் மூலம், புற்றுநோய் உள்ள நோயாளிகளுக்கு சரியான சிகிச்சை முறைகளை உடனடியாக மேற்கொண்டு குணம்பெற வழி ஏற்படுகிறது.

கே.எம்.சி.எச்.மருத்துவமனையில், புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்க ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சை மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும் புற்றுநோய்க்குரிய சிகிச்சையில் கே.எம்.சி.எச்.மருத்துவமனை சர்வதேச தரம் கொண்டுள்ளது.

மேலும் விபரங்களுக்கு, புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் பரத் ரங்கராஜன், கே.எம்.சி.எச்.மருத்துவமனை, அவினாசி ரோடு, கோயம்புத்தூர். போன் : +91 422 4324107 இ-மெயில் : drbharath@kmchhospitals.com ஆகியவற்றிலும் தொடர்பு கொள்ளலாம்.

-Advt